1990 ஏப்ரல் 10]

10–00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது தொடர்பானதா?

திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கோடிக்கரையிலே நமது மீனவர்களை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றிருக்கிறார்கள் என்கிற தகவல். அதைப் போல புதுக்கோட்டையிலே இருந்து 107 படகுகளை எடுத்து தங்களுடைய யாழ்ப்பாணத்திற்கு பக்கத்திலே இருக்கிற ஒரு சின்னஞ்சிறு தீவிலே கொண்டு போய் அதில் இருக்கிற மீன்களை வைத்திருக்கிறார்கள் என்று செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அங்கே அப்படி கொண்டு போனவர்களை அவர்கள் தாக்கினார்கள் என்ற செய்தியும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. கோடிக்கரையைப் பொறுத்த வரையில் நமது கப்பற்படை நமது இயந்திரப் படகுகளிலே வந்து புலிகளை தடுத்து நிறுத்துவதற்கு முயன்றபோது அவர்கள் அங்கு கடல் பகுதியிலே கடற்கரைப் பகுதியிலே ஆழம் இல்லாத பகுதியிலே ஷேலோ வாட்டர்ஸ் என்ற அதற்குள்ளே வந்து தப்பி விட்டார்கள் என்ற செய்தியும் வந்திருக்கிறது.

நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புவது கடல் எல்லையை தாண்டி நமது மீனவர்கள் போகிறார்கள் என்று சொன்னால் சுற்றிலும் தண்ணீர் இருக்கிற பகுதியிலே எது நமது எல்லை எது இன்டர்நேஷனல் வாட்டர் என்று தெரியாத போது அவர்கள் கடத்திச் செல்லப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள் என்று சொன்னால் மீனவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, நமது கடற்கரை எல்லையிலேயே அவர்கள் தப்பி விடுகிறார்கள் என்று சொன்னால் நமது கடற்கரைப் பகுதியே பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே இந்தியாவே பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது என்று பார்க்கிற போது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சென்றார்கள், அடிபட்டவர்களுக்கு ஆறுதல் சொன்னார்கள் என்ற தகவல் கூட வந்திருக்கிறது. அவர்களுடைய எல்லையிலே போய் நமது மீனவர்கள் தெரியாமல் மீன் பிடித்து விட்டால் கூட ராணுவத்திற்கு புலிகள் உதவி செய்வார்களானால் தெரிந்தே கடலைக் கடந்தும் நமது தமிழகத்திற்கு உள்ளேயே புலிகள் இருக்கிறார்களே அவர்களை எல்லாம் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றியெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுக்கிற அறிக்கையையோ அல்லது அமைச்சர் மூலமாக மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் தருகிற அறிக்கையையோ நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து நேரில் அறிந்து வர அந்தத் துறையினுடைய அமைச்சர் அனுப்பப்பட்டிருக்கிறார்

என்று நேற்றைய தினம் சொன்னேன். அவர் இன்று தான் வந்து சேர்ந்திருக்கிறார். அது குறித்து அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கிறது. அவரோடு நான் கலந்து பேசி நாளைய தினம் முழு விவரத்தை இந்த அவைக்கு அளிப்பதாக உறுதி கூறுகிறேன். அதற்கிடையே கடல் எல்லை எது என்று தெரியாத ஒரு சூழ்நிலை இருப்பதாக நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இது நீண்ட காலமாக, மத்தியிலே அரசுகள் இருந்தாலும் கூட, அந்த அரசுகள் அப்படி ஒரு எல்லையை வகுத்துத்தர வேண்டிய பொறுப்பிலேயிருந்து தவறி விட்டார்களா என்ற கேள்விக்கு நாம் விடை காண வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு வேளை அந்த எல்லை வகுக்கப்பட்டு அது தெரியாமலோ அல்லது மீறியோ நமது மீனவர்கள் அங்கு சென்றார்களா என்பதும் அறிந்து கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இந்த அரசு இருப்பதைப் போலவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே எதிர் தரப்பிலே உள்ளவர்கள் பேசுவதைப் போலவும் ஒரு சூழ்நிலை உருவாவது நல்லது அல்ல. விடுதலைப் புலிகளுடைய தலைவரும் கூட இந்தியாவோடு நாங்கள் நேசமாக இருக்கத்தான் விரும்புகிறோம் என்று பேட்டி அளித்து அது பத்திரிகையிலே வந்திருக்கிறது. டைம்ஸ், இண்டர்நேஷனல் போன்ற பத்திரிகைகளிலேயும் கூட அந்தப் பேட்டி விரிவாக வெளியாகியிருக்கிறது.

இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் நமது மீனவர்கள் எல்லையைத் தாண்டிச் செல்லாமல் இருக்க எல்லை எது என்பது குறித்து இனிமேலாவது, இந்தப் புதிய மத்திய அரசாவது அதை நிர்ணயிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க நாம் முயற்சிக்க வேண்டும். இன்றைய தினம் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் டெல்லியிலே நடைபெறுகிற மாநாடுகளிலே கலந்து கொள்ள என் சார்பிலே செல்லுகிறார்கள். அப்படி செல்லும் போது தகவல்களை, விவரங்களை எல்லாம் அங்குள்ள தொடர்புடைய அமைச்சர்களிடத்திலே பேசி அது குறித்து ஆவன செய்வதற்கு முயற்சிகளை அவர்களும் மேற்கொள்ளுவார்கள். அதைப்பற்றி, அவரிடத்திலே நான் மாலையிலேயே செல்லுவதற்கு முன்பு பேச இருக்கிறேன். எனவே நேற்று அமைச்சர் சென்று சேகரித்த விவரங்களை நாளைய தினம் தொகுத்து இந்த அவைக்குத் தருவேன் என்ற உறுதியை அளிக்கிறேன்.

1990 ஏப்ரல் 10]

(ஆ) வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

திரு. கே. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு வருவாய்த் துறை ஊழியர்களுடைய போராட்டம் 20 நாட்களுக்கு மேலாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை தாங்கள் அறிவீர்கள். இந்தப் போராட்டத்தின் விளைவாக அரசுக்கும் ஊழியர்களுக்கும் மக்களுக்கும் கஷ்டங்கள் ஏற்படுகிறது என்பதும் ஒரு உண்மை. நாமெல்லாம் அறிந்த உண்மை.

10–05 மணி

அந்தப் பேச்சுவார்த்தைக்கு அவர்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டும் என்று பல தடவை நாங்களும், குறிப்பாக நானும், நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வேண்டிக் கொண்டோம். அவரும் பேச்சு வார்த்தையை ஆரம்பித்து, 2 தடவை பேச்சு வார்த்தை நடந்தது. திடீரென்று ஸ்டிரைக்கைக் கைவிட்டால்தான் பேச்சு வார்த்தை என்ற ஒரு நிலை துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டு, அதன் விளைவாக அந்தப் பேச்சு வார்த்தை நின்று போய் விட்டது. உடனடியாக அவர்களைக் கூப்பிட்டு வைத்துப் பேசினால், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் ஆழமாகத் தலையிட்டுப் பேசினால் தீர்க்க முடியாத பெரும்—தாண்ட முடியாத மலைகள் இருப்பதாக எனக்குப் படவில்லை, எனவே அப்படிப்பட்ட ஒரு அணுகு முறையோடு, அவருடைய இலாக்கா, அவருக்குக் கீழே இருக்கின்ற ஊழியர்கள், அவர்களை எந்த நேரத்திலும் அவர்கள் கூப்பிட்டு வைத்துப் பேசுவதற்கு சகல உரிமைகளும் உண்டு, செய்யவும் முடியும். அந்த முறையில் இனி இப்படிப் பட்ட ஒரு சஸ்பென்ஸ் நிலைமையை நீடிக்காமல் அவர்களை உடனே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து கூப்பிட்டுப் பேசி ஒரு முடிவைக் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறை பிரச்சினைக்காக நேற்று முன் தினம் 78-வது விதியின் கீழ் ஒரு விவாதத்தை எழுப்ப வேண்டும் என்று உங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு எதிர் பாராத விதமாக இதை அனுமதித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அந்தப் போராட்டம் ஒரு வலுவான சூழ்நிலைகள் ஏற்பட்டு, மறியல் என்ற அளவிற்கு ஆகி, கைது செய்யப்படுகிற நிலைமைகள் ஏற்பட்டு, அவர்கள் காவல் துறையினாலே கொடுமைப் படுத்தப்படுகிற நிலைமைகள் உருவாகி விட்டன. எனவே,